**OS No.64/2021**

PW 2 – தனசேகரன்

நாள் 12.11.2025

**வா.சா. 2 அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அவரை பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

வாதி என் அக்கா ஆவார். அவர்களுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் ஞாயத்திற்கு சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை நான் தான் சொன்னேன். எனக்கு வயது 64 ஆகும். நான் 27.12.1960 ல் பிறந்தேன். என் ஆதார் அடையாள அட்டை மற்றும் பள்ளி மாற்று சான்றில் இந்த தேதி தான் உள்ளது.

அதன் படி எனக்கு தற்போது வயது 65 ஆகிறது என்றால் சரிதான். என் அக்காவிற்கு 1976 ல் திருமணம் நடைபெற்றது மாதம், தேதி நினைவில்லை. எனக்கு அப்போது 14 – 15 வயதிருக்கும். நான் அப்போது மைனர் என்பதால் எந்த தேதியில் எந்த மாதத்தில் திருமணம் நடைபெற்றது என்பது எனக்குத் தெரியாது.

திருமண காலத்தில் சீர்செய்யும் சமயத்தில் என்ன சீர் கொடுத்தார்கள் என்பது எனக்குத் தெரியாது என்றால் சரிதான். நிரூபண வாக்குமூலத்தில் தாவா சொத்து சீதனமாக கொடுத்தது என்பது நான் மைனராக இருந்ததால் எனக்கு தெரியவாய்ப்பில்லை என்றால் சரிதான். அதன் பிறகு தெரிந்து கொண்டேன்.

தாவா சொத்திற்கு வருவாய் துறை ஆவணத்தில் இன்று வரையில் உங்கள் அப்பா பெயரில் உள்ளது என்றால் சரிதான். கிரய பத்திரம் வாதியின் தாயார் பெயரில் உள்ளது. வழக்கு சொத்து 1984 ம் ஆண்டு பெரியசாமி மகன் செல்லத்துரைக்கு உங்கள் அப்பா ஒத்தி வைத்தாரா என்றால் ஒத்திக்குவைத்தார்.

அந்த ஒத்தியானது 1989 ல் திருப்பப்பட்டது என்றால் சரிதான். 1987 ல் பாகவிஸ்தி பத்திரத்தில் யார் யார் தரப்பினர்கள் என்றால் சிவாஜி, தனசேகரன், பாண்டி, சசிகுமார் ஆகியோர் வீடு, கடையையும் பாகவிஸ்தி செய்து கொண்டனர்.

1987 பாகவிஸ்தியில் வீடு, கடை, நஞ்சை, புஞ்சை ஆகியவைகள் பாகவிஸ்தி செய்யப்பட்டது என்றால் அது தவறு. இந்த பாகவிஸ்தி சமயத்தில் திருமணத்தின் போது நல்ல சீர் செய்யதால் வாதிக்கு இந்த சொத்தில் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல.

ஏற்கனவே தாவா சொத்து வருவாய் துறை ஆவணத்தில் உங்கள் அப்பாவின் பெயரில் இருந்து இன்றுவரையில் உங்கள் அண்ணன் தம்பி பெயரிலேயே இருந்து வருகிறது என்றால் சரியல்ல. உங்கள் அண்ணன் தம்பி தான் இன்று வரையில் அனுபவத்தில் அதனை வைத்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

எந்த ஒரு உரிமையும் அனுபவமும் இல்லாத உங்கள் அக்காவிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உங்கள் அக்கா சொன்னது போல் திருமண சமயத்தில் இந்த சொத்து சீதனமாக கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. சீதன சொத்தாகத் தான் கொடுக்கப்பட்டது.

**மறுவிசாரணை இல்லை.**

**–Sd–**

**Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct.**

**–Sd–**
**District Munsif,**
**Manamadurai.**